# நீதிப் பாடல்கள் 14

## (அ) ஆத்திசூடி



**மீதூண் விரும்பேல்.**

அதிகமாக உண்ண ஆசைப்படாதே.

**மீதூண்** - அதிகமாகச் சாப்பிட;

**வைகறைத் துயில் எழு.**

அதிகாலையிலே தூக்கம் விழித்து எழ வேண்டும்.

**வைகறை** - அதிகாலையில்; **துயில் எழு** - தூக்கம் கலைந்து எழுவாயாக.

**நூல் பல கல்.**

அறிவு வளர்ச்சிக்கான நூல்கள்பலவற்றையும் விடாது கற்பாயாக.

**நூல் பல** - அறிவை வளர்க்கும் நூல் பலவற்றையும்; **கல்** - கற்பாயாக.

**செய்வன திருந்தச் செய்.**

செய்யும் காரியங்களைத் திருத்தமாகச் செய்ய வேண்டும்.

**செய்வன** - செய்யும் காரியங்களை; **திருந்த** - திருத்தமாக;

## (ஆ) கொன்றை வேந்தன்

**மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.**

தேவாமிர்தமேயானாலும் விருந்தினருடன் பகிர்ந்து உண்ணுக.

**மருந்தே ஆயினும்** - கிடைப்பதற்கு அரிய தேவாமிர்தமே கிடைத்தாலும்; **விருந்தோடு உண்** - விருந்தினருடன் பகிர்ந்து உண்பாயாக.

**கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி**

அரசாட்சியில் அமர்ந்திருப்பவன் துன்பம் உள்ள இடத்திற்குச் சென்று உதவுதல் கடமையாகும்.

**பதவுரை:-**

**கொற்றவன்** - அரசாட்சியில் அமர்ந்திருப்பவன்; **அறிதல்** - அறிய வேண்டியது என்ன வென்றால்; **உற்ற இடத்து** - மக்கள் துன்பம் உற்ற இடத்திற்குச் சென்று **உதவி** - உதவி செய்வதேயாகும்.

## (இ) நல்வழி

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மாநிலத்தீர் - வேண்டா
"நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கு என்" என்று இட்டு உண்டு இரும்.

இறந்து போனவரை நினைத்து நினைத்து அழுவதால் பயன் என்ன? மாண்டவர் மீண்டும் வரமாட்டார் "நமக்கும் ஒருநாள் மரணம் ஏற்படும்" என்று அறிந்து தருமம் செய்யுங்கள்.

**பதவுரை:-**

**மாநிலத்தீர்** - பெரிய பூமியிலுள்ள மக்களே! **ஆண்டு ஆண்டு தோறும் -** வருடக்கணக்கில்; **மாண்டார் வருவாரோ?** - இறந்தவர் திரும்பி வருவாரோ? (வரமாட்டார்) ; **வேண்டா-** (எனவே) அழவேண்டா; **நமக்கும் அதுவழியே** - நமக்கும் அதுவேதான் வழி ; **நாம் போம் அளவும்** - அவ்வழியே நாம் போகும் வரை ; **எமக்கு என் என்று** - நமக்கு என்ன சம்பந்தம் இருக்கிறது என்று ; **இட்டு** - எல்லாருக்கும் கொடுத்து ; **உண்டு** -நீங்களும் வயிறார உண்டு ; **இரும்** - மகிழ்ச்சியுடன் இருங்கள்.

## (ஈ) மூதுரை (வாக்குண்டாம்)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் -சபை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டாதவன் நன் மரம்:

நல்ல மரம் எது? காட்டிலே இருப்பதா? கொம்பும் கிளையும் உள்ளதா? இல்லை. பின் எது? நாலுபேர் கூடிய சபையிலே ஒருவர் நீட்டிய எழுத்து ஓலையை வாசிக்க இயலாது நிற்பவனே நல்ல மரம் ஆவான். எழுதப் படிக்க அறியாதவன் பிறர் உள்ளக்குறிப்பை அறியாதவன் நல்ல மரத்துக்கு ஒப்பாவான்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பதவுரை:-

**கவை ஆகி** - கிளைகளை உடையன ஆகியும்; **கொம்பு ஆகி** - கொம்புகளை உடையனவும் ஆகி; **காட்டு அகத்தே** - காட்டிலே; **நிற்கும்** - நிற்கின்ற; **அவை** - அந்த மரங்கள்; **நல்ல மரங்கள் அல்ல** - நல்ல மரங்களாக மாட்டா; **சபை நடுவே** - கற்றோர் மிக்க சபையினிடத்திலே ; **நீட்டு ஓலை** - ஒருவன் கொடுக்கும் ஓலையை; **வாசியா நின்றான்** - படிக்கத் தெரியாமல் நிற்பவனும்; **குறிப்பு அறிய மாட்டாதவன்** - பிறரது உள்ளக் குறிப்பை உணராதவனுமே; **நல்மரம்** - நல்ல மரம்.

**ஔவையார்**

## (உ) முதுமொழிக்காஞ்சி

காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப்படுதல்.

பிறரால் அன்பு செய்யப்படுவதைக் காட்டிலும் தன் செயல்களினால் அவர் மதிக்கும்படி நடத்தல் மேலானது.

வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.

வளமான செல்வ வாழ்க்கையை விட உண்மை வாழ்க்கையே மேலானது.

.

**கூடலூரர்க்கிழார்**

## (ஊ) வெற்றி வேற்கை (நறுந்தொகை)

பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

பெருமையும் சிறுமையும் அவரவர் தம் நடத்தையால் கிடைக்கும் .

**பெருமையும்** - மேன்மையும் ; **சிறுமையும்** - கீழ்மையும் ; **தான் தர வருமே** - அவரவர் நடந்துக்கொள்ளும் விதத்திற்கு ஏற்ப வரும்.



கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

பிச்சை எடுத்தாலும் கல்வி கற்பதே நல்லது.

**கற்கை நன்றே** - கல்வி கற்பது நல்லது ; **பிச்சை புகினும்** - பிச்சை எடுத்தாலும்;

**அதிவீரராம பாண்டியன்**

## (எ) திருக்குறள்

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்டவடு.

தீப்புண் ஆறிவிடும் ஆனால் கடுஞ் சொல்லாகிய புண் மனத்தில் என்றும் ஆறாது.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப(து) அறிவு.

எந்தப் பொருளைப்பற்றி யார் யாரிடம் கேட்டு அறிந்தாலும் அவற்றின் உண்மையான பொருளை அறிந்து கொள்வது அறிவாகும்.



குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்

ஒருவனுடைய குணம் குற்றங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து அவற்றுள் எது மிகுதியாக உள்ளதோ, எந்தத் தன்மை மேலோங்கி காணப்படுகிறதோ அதையே சிறப்பாகக் கொள்ள வேண்டும்.

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையர்
என்பும் உரியர் பிறர்க்கு

பிறரிடத்து அன்பு இல்லாதவர்கள் எல்லோப் பொருள்களையும் தமக்கே உரிமையாக்கி வாழ்வர். அன்புடையவர்கள் பிறர்க்காகத் தம் உயிர் உடம்பைக் கொடுத்தும் நன்மை செய்வர்.



திருவள்ளுவர்

## (ஏ) உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடம்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

படிக்காமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது; எவர்மீதும் அவதூறான சொல் கூறலாகாது; தாயை மறக்கலாகாது; வஞ்சகர்களுடைய சிநேகம் கூடாது; செல்லத்தகாத இடங்களுக்குச் செல்லல் ஆகாது; ஒருவரைக் கண்டபோது மட்டும் புகழ்ந்து, காணாதபோது இகழ்தலாகாது.

**ஓதாமல்** - படிக்காமல்; **ஒரு நாளும்** - ஒருநாள் கூட; **இருக்க வேண்டாம்** - இராதே; **ஒருவரையும்** - எவரைப்பற்றியும்; **பொல்லாங்கு** - அவதூறான சொற்களை; **மாதாவை** - தாயாரை; **வஞ்சனைகள் செய்வாரோடு** - வஞ்சகருடன்; **இணங்கவேண்டாம்** - சிநேகம் செய்யாதே; **போகவிட்டு** - ஒருவர் போனபின்; **புறம் சொல்லி** - அவரைப்பற்றி குறைகூறி; **திரியவேண்டாம்.** - அலையாதே; **வாகு** - தோள்வலி; **ஆரும்** - நிறைந்த; **குறவருடை** - குறவர் குடியிலே பிறந்த; **வள்ளி** - வள்ளியின்; **பங்கன்** - பக்கத்தில் உள்ளவனான; **மயிலேறும் பெருமானை** - மயில்வாகனனை; **வாழ்த்தாய்** - வாழ்த்துவாயாக; **நெஞ்சே** - மனமே.

**-உலகநாதன்-**

## புதிய ஆத்திசூடி

**அச்சம் தவிர்**
**ஆண்மை தவறேல்**
**இளைத்தல் இகழ்ச்சி**
**ஈகை திறன்**
**உடலினை உறுதிசெய்**
**ஊண் மிக விரும்பு**
**எண்ணுவது உயர்வு**
**ஏறுபோல் நட**
**ஐம்பொறி ஆட்சிகொள்**
**ஒற்றுமை வலிமையாம்**

**குன்றென நிமிர்ந்து நில்**
**கூடித் தொழில் செய்**
**கெடுப்பது சோர்வு**
**கேட்டிலும் துணிந்துநில்**

**செய்வது துணிந்து செய்**
**சேர்க்கை அழியேல்**
**சைகையில்**
**பொருளுணர்**
**சொல்வது**
**தெளிந்துசொல்**
**சோதிடம் தனையிகழ்**

**நினைப்பது முடியும்**
**நீதிநூல் பயில்**
**நுனியளவு செல்**
**நூலினைப் பகுத்துணர்**
**நெற்றி சுருக்கிடேல்**
**நேர்படப் பேசு**

-சுப்பிரமணியபாரதி-

## கிரகித்தற் பயிற்சி

*1 ஔவையார் இயற்றிய இலக்கியங்கள் எவை?*
*2 நறுந்தொகையை இயற்றியவர் யார்?*
*3 எம்மில் இறந்து போனவரைப் பற்றி நல்வழி என்ன கூறுகிறது?*
*4 மூதுரையில் நல்ல மரத்திற்கு ஒப்பிடப்படுபவன் யார்? காரணம் என்ன?*
*5 உண்மை வாழ்வின் உயர்வு பற்றி முதுமொழிக்காஞ்சி யாது கூறுகிறது?*
*6. வைகறைத் துயில் எழு என்பதை விளக்குக*
*7 மனதில் அன்பில்லாதவர், அன்புடையவர்களின் பண்புகள் பற்றி வள்ளுவர் யாது கூறுகிறார்?*
*8 'ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்' என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?*
*9 புதிய ஆத்திசூடியில் உம்மைக் கவர்ந்த வரிகளையும் அதற்கான காரணத்தையும் எழுதுக.*
*10. நூலினைப் பகுத்துணர்ந்து கற்க வேண்டியதன் அவசியத்தை விளக்கி எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1 : உமது நண்பருடன் சேர்ந்து மூதுரைப் பாடலில் உள்ள சிறப்புக்களைக் கலந்துரையாடுக.

செயற்பாடு 2 : பாடத்திலுள்ள பாடல்கள் கூறும் செய்திகள் நடைமுறை வாழ்வோடு பொருந்தும் தன்மை பற்றி குழுவில் ஏனையோருடன் கலந்துரையாடுக.

செயற்பாடு 3 : சோடியாக செயற்பட்டு பாடத்தில் வரும் திருக்குறள், முதுமொழிக்காஞ்சி பாக்களின் பொருளை உமது நடையில் எழுதுக

செயற்பாடு 4 : குழுவாகச் செயற்பட்டு கல்வியின் சிறப்பு என்ற தலைப்பில் பின்வரும் படிமுறைகளைக் கையாண்டு கட்டுரை வரைக.

- தகவல் திரட்டல்
- வாசித்து கிரகித்தல்
- குறிப்புகள் எழுதல்
- அவற்றை ஒழுங்கமைத்தல்
- பெரியோர் கூற்றுக்களைப் பொருத்தமாகக் கையாண்டு கட்டுரை அமைத்தல்

செயற்பாடு 5 : புதிய ஆத்திசூடி கூறும் விடயங்களை நடைமுறை வாழ்வில் கடைப்பிடிப்பவர் அடையும் மேம்பாடுகளை குழுவாகச் செயற்பட்டு கலந்துரையாடி எழுதுக.

(பாரதியார் கவிதை நூலில் புதிய ஆத்திசூடியின் முழுப்பகுதியையும் காண்க.)


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

# மொழிவளம்

## அடுக்குத் தொடர்

சொற்கள் தனித்து இயங்கும் போது தரும் பொருளுக்கும், அடுக்கி வந்து தரும் பொருளுக்குமிடையே வேறுபாடு உண்டு.

1. தம்பி ஓடு
2. தம்பி ஓடு ஓடு

முதலாவது தொடரில் இடம்பெறும் ஓடு என்ற சொல் ஏவல் பொருளில் வருகிறது.

இரண்டாவது தொடரில் இடம்பெறும் ஓடு ஓடு என்ற சொல் விரைவாக நிற்காமல் ஓடு என்ற பொருளைத் தருகிறது.

அடுக்குத் தொடர்கள் உணர்ச்சியையும் கருத்துச் செறிவையும் கொண்டதாக இருக்கும்.

1. பாம்பு பாம்பு ஓடி வாருங்கள்.
2. அடி அடி என்று கத்தினோம்.
3. நிலா வா வா!
4. அப்பா அப்பா என்று கத்தியவாறு தம்பி வந்தான்.
5. கண்டோம் கண்டோம் என்று பிள்ளைகள் கத்தினார்கள்.
6. ஒளி படைத்த கண்ணினாய் வா வா!
7. உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா!

## பயிற்சி

**பின்வரும் அடுக்குத்தொடர்களின் பொருள் விளங்குமாறு அவற்றை வாக்கியங்களில் எழுதுவோம்.**

1. எடு எடு
2. நில் நில்
3. பிடி பிடி
4. குழந்தை குழந்தை
5. போ போ

# இலக்கணம்

## கருவி வேற்றுமை

**பின்வரும் வாக்கியங்களைப் பொருள் விளங்குமாறு வாசிப்போம்**

★ டேவிட் பேனையால் எழுதினான்.
★ சிற்பி உளியால் செதுக்கினான்.
★ மாணவர்கள் கத்தியால் வெட்டினர்.
★ நாங்கள் பென்சிலால் வரைந்தோம்.

இந்த வாக்கியங்களில் இடம்பெறும் பேனை, உளி. கத்தி, பென்சில் ஆகிய பெயர்ச் சொற்கள் ஆல் உருபை ஏற்று-

| | | |
|---|---|---|
| பேனை | ஆல் _ | பேனையால் |
| உளி | ஆல் _ | உளியால் |
| கத்தி | ஆல் _ | கத்தியால் |
| பென்சில் | ஆல் _ | பென்சிலால் |

என்று இடம்பெறுவதனைக் காணமுடிகிறது . இந்த வாக்கியங்களில் இடம்பெறும் ஆல் என்பது கருவி வேற்றுமையின் உருபாகும். இந்த வசனங்களில் ஆல் உருபு கருவிப் பொருளில் வருகிறது .

அதாவது எழுதுவதற்கு பேனையும், செதுக்குவதற்கு உளியும், வெட்டுவதற்கு கத்தியும், வரைவதற்குப் பென்சிலும் கருவியாக வந்துள்ளன.

★ மாணவர்களால் வரையப்பட்ட ஓவியம்.
★ குருவிகளால் கட்டப்பட்ட கூடு.
★ எங்கள் ஆசிரியர்களால் எழுதப்பட்ட புத்தகம்.
★ சரிதாவினால் தைக்கப்பட்ட சட்டை.

இந்த வசனங்களில் இடம்பெறும் ஆல் உருபு கருத்தா பொருளில் வருகிறது.
ஓவியம் வரைவதற்கு மாணவர்கள் கருத்தாவாகச் செயற்படுகின்றனர்.
கூட்டை உருவாக்குவதற்கு குருவிகள் கருத்தாவாக உள்ளன.
புத்தகம் எழுதுவதற்கு ஆசிரியர்கள் கருத்தாவாகச் செயற்படுகின்றார்கள்.
சட்டை தைப்பதற்கு சரிதா கருத்தாவாகச் செயற்படுகின்றாள்.
ஆகவே :

மூன்றாம் வேற்றுமை எனப்படும் கருவி வேற்றுமையின்

உருபு : ஆல் ஆகும்.
இது : **கருவி, கருத்தா** ஆகிய இரு பொருள்களில் வருகிறது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக